ORIGINAL ARTICLE

# பெரியபுராணத்தில் சுந்தரர் பாடிய பதிகங்களின் பதிவுகள்

# [PERIYAPURĀṆATTIL CUNTARAR PĀṬIYA PATIKAṄKAḶIṈ PATIVUKAḶ]

# RECORDS OF SONGS BY SUNDARAR IN PERIYAPURANA

**ஏ.விஜயலட்சுமி / A.Vijayalachumi *[1]**

[1] Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts and Science College Mailam, Tamilnadu, India. Email: gokulviji1989@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/188

**Abstract**

In A.C. seventh century year, Sundarar was born in saivar kulam.Among, various saivargal tamil vedham pannirthirumuraigalul sundarar wrote “Seventh Thirumurai”.Siva peruman in his own vedham viritha thiruvayil “Thillaival Anthanartham Adiyarkum Adiyen” which gives a step by step sivanadiyargal history in detail; “Alavatra anbin perumaiyum” being one Thiruthondathogai as thirupattu was sang and given; Many perungapiyam ellakangal having in that periyapuranthin first book sundaramoorthi swamigalin thiruthonda thoigaiyagum.By gods grace he had singing tendancy, he got married with two religion women, One is being in Kanigarkulam and the other one is being in Vellalarkulam. Being his history does not make us religion separation between the surroundings; and a normal man he was adopted by religion feudatory along with Cheraman Perumal in his eighteen years old he went to kailaiyukum and being more devoted to Lord Siva; Tamil persons were more penance in thiruthondathogai tamil book tells good world has got by Sekkailar, and “Mathavam Seitha Thenthisai Valinthida” words tell the periyapuranam song. Sundarar has collected and give the history for Sekkailar, and he has been written his kapiyam by with the help of sundarar. Here, in periyapuranam we know about sundarar life in his scriptures.

**Keywords:** Periyapuranam, Devaram, Sundarar, Sekkizhar, Veeduperu, Thaduthattkoluthal

**ஆய்வுச் சாரம்**

கி.பி.7 ஆம் நூற்றாண்டில் திருநாவலூரில் சைவர் குலத்தில் பிறந்தவர் சுந்தரர். சைவர்களின் தமிழ் வேதமான பன்னிரு திருமுறைகளுள் சுந்தரர் பாடியது ஏழாம் திருமுறையாகும். சிவபெருமான் தம் வேதம் விரித்த திருவாயால் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்க சிவனடியார்களின் வரலாற்றையும், அளவற்ற அன்பின் பெருமையையும் திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பாட்டு ஒன்றைப் பாடி அருளிச்செய்துள்ளார். பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவும் கொண்டதாக இயற்றப்பட்டுள்ள பெரியபுராணத்தின் முதல் நூல் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகையாகும். இவர் இறையருளால் பாடல் பாடும் ஆற்றல் பெற்றவர். சுந்தரர் கணிகர் குலத்து பெண் ஒருத்தியையும், வேளாளர் குலத்துப் பெண்மணி ஒருத்தியையும் மணந்து கொண்டவர். இவருடைய வரலாறு மூலம் சாதி வேறுபாடற்ற சமூகத்தைக் காணமுடிகின்றது. இல்லறத்தில் இருந்து கொண்டு இறையனுபவத்தில் தோய்ந்து சேரமான் பெருமாளுடன் தம் பதினெட்டாம் வயதில் கயிலைக்குச் சென்று சிவபெருமான் திருவடிகளின் கலந்தவர். தமிழ் மக்கள் செய்த தவப்பயனாகத் திருத்தொண்டத்தொகை தமிழ் கூறும் நல்லுலகிற்குக் கிடைத்துள்ளதைச் சேக்கிழார் "மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட" என்ற பெரிய புராணப் பாடல் சுட்டுகின்றது. சேக்கிழார் காப்பியம் எழுத மூலக்காரணமாக அமைந்த வரலாறுகளைத் தொகுத்துக் கொடுத்தவர் சுந்தரர் ஆவார். அவ்வகையில் பெரியபுராணத்தில் சுந்தரர் பதிகங்களின் பதிவுகள் குறித்து இக்கட்டுரை அமைகின்றது.

**கருச்சொற்கள்:** பெரியபுராணம், தேவாரம், சுந்தரர், சேக்கிழார், வீடுபேறு, தடுத்தாட்கொள்ளுதல்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 5th Dicember 2021, revised th February 2022, accepted 27th February 2022

**முன்னுரை**

சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் ஏழாம் திருமுறையைப் பாடியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவார். பெரிய புராணம் தோன்றக் காரணமாக அமைந்த திருத்தொண்டர் தொகையைப் பாடியவரும் இவரே ஆவார். சேக்கிழார் குறிப்பிடும் அறுபத்து மூன்று நாயன்மார்கள் முக்தியைவிட பக்தியையே பெரிதாக எண்ணினர். தமிழில் பக்திக்கு ஒரு நூல் பெரியபுராணம் என்பதில் ஐயமில்லை. அதனால் தான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என்று சேக்கிழாரைப் பாராட்டுகிறார்.

காலத்தால் முந்தைய தேவாரத்தில் சுந்தரர் பாடிய ஏழாம் திருமுறைப் பதிகங்கள் நூறு ஆகும். இதில் ஏழு பதிகங்கள் மட்டுமே சேக்கிழார் பெரியபுராணத்தில் பதிவு செய்துள்ளார். அவ்வகையில் பெரியபுராணத்தில், சுந்தரர் பாடிய பதிகங்களின் பதிவுகள் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**சுந்தரரும் புராணமும்**

சுந்தரர் தேவாரப் பாடலில் அர்ச்சுனனுக்காகச் சிவபெருமான் வேடன் உருவங்கொண்டு வேட்டையை மேற்கொண்ட செய்தியையும், இராமாயணத்தில் இராவணன் தனக்கு அதிக வலிமை உண்டு என ஆணவத்துடன் இறைவனுடைய கயிலை மலையைப் பெயர்க்கும்போது அவனுடைய வலிமையை நெரித்து அழித்த புராணத்தையும், அவனுடைய அச்சம் தரும் உருவத்தைக் கயிலை மலையில் ஊன்றிய வரலாற்றையும், திரிபுரங்களை அழித்த செய்திகளும், தக்கனது யாகத்தில் இந்திரனைத் தோள் முரித்ததும், யானையை உரித்த வரலாற்றுச் செய்திகளும் திருநாவலூரில் இருக்கும் இறைவன் நிகழ்த்தியவை என்பதை,

வேட்டங் கொண்டார் வெண்ணெய் நல்லூரில<br>
பிடுக்குண்டென்றோடி ஓர் வெற்பெடுத்<br>
தான் வலியை நெரித்தார் உம்பரார் கோனைத்தின் தோள்முரித்தார் உரித்தார்<br>
களிற்றைச்"

(Srimath Thirunavukarasu Thambiran Swamigal,1994)[1]

என்னும் பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. இதனைச் சேக்கிழார் பெரியபுராணத்தில், சுந்தரரைச் சிவபெருமான் திருநாவலூருக்குச் சென்று பதிகம் பாடும்படி செய்தார் என்ற செய்தியை மட்டும் பதிவு செய்துள்ளார். ஆனால், சுந்தரரை அடையாளப்படுத்தும் பெரியபுராணத்தில் புராண வரலாறு கிடைக்கப்பெறவில்லை. காஞ்சிப் புராணத்தில், "முப்புரங்களின் மூவர்புத்தன் மொழித்திறந்து மயங்கிடா" என்ற பாடல்வரி மூலம் திரிபுரம் எரித்த செய்தியை எடுத்து இயம்புகிறது.

**சுந்தரரும் மனமும்**

பல நோய்களை உடைய இவ்வுடல் பிறப்பு, இறப்பு என்னும் பெருந்துன்பங்களை நீக்கி இந்த நிலவுலகில் தீவினைகளைச் செய்தும், பல பொய்களைப் பேசி திரிந்தும் உயிர்வாழ்வதற்கு இந்த செயல்கள் ஏற்புடையன என்று கருதித் துன்பத்தை அடைந்து மெலிந்து அழியாமல் திருத்தினை நகரில் உள்ள முழுமுதற்கடவுளான சிவபெருமானைச் சென்று அடைந்தால் கேடின்றி வாழலாம் என்று தன் மனதிற்கு அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளதை,

பிணிகொள் ஆக்கை பிறப்பு இறப்பு என்னும்<br>
இதனை நீக்கி ஈசன் திருவடி இணைக்கு ஆள்<br>
……………………………………………………<br>
……………………….திருத்தினை நகருள்

சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே" (Srimath Thirunavukarasu Thambiran Swamigal,1994)[1]. என்ற பாடல் பறைசாற்றுகின்றது. சுந்தரர் திருத்தினை நகரில் உள்ள சிவபெருமானை வணங்கி வளமான திருப்பதிகத்தைப் பாடினார் என்று சேக்கிழார் பெருமான் தனது பெரியபுராணத்தில்,

பரம்பொருளைப் பணிந்து தாள் பரவிப் போய்ப் பணிந்தவர்க்கு
வரந்தருவான் தினை நகரை வணங்கினார் வண்டமிழ்பாடி (Manikkanar, 1998)[2]

என்ற வரிகளின் மூலம் சுந்தரரைப் புகழ்ந்தும் திருத்தினை நகரில் உள்ள சிவபெருமானை வணங்கினால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் கூறியுள்ளதை அறிய முடிகின்றது. மேலும்,

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேலிறைதாள் நினைவாய்

என்னும் கந்தர் அநுபூதிப் பாடலில் கெட்டுஒழியும் மனமே, நீ உய்யும் வழியைக் கூறுகிறேன் கேட்பாயாக, தானமும் இறைவனின் திருவடிகளை நினைத்து தியானம் செய்தால் துன்பங்களில் இருந்து விடுபடலாம் என்று அருணகிரிநாதர் கூறிய செய்தியைக் கந்தர் அநுபூதி பாடல் மூலமும் உணரமுடிகிறது.

**சீகாழிப் பெருமை**

மனிதனாகப் பிறந்து பிறகு இறுதிகாலத்தில் இறத்தலும் பின் வேறோர் உடம்பில் பிறத்தல் என்ற இரண்டையும் விலக்கி, சுற்றத்தாரையும் துணையென்று நினைக்காமல் சிவபெருமானே துணையென்று நினைத்து வணங்குதல் வேண்டும். அவ்வாறு என்னைப் படைத்து, தேவராலும் காண முடியாத காட்சியைக் கயிலையில் இருந்தபடியே திருக்கழுமலம் எனும் நகரில் இறைவனைக் கண்டு கொண்டதால் எனக்கு உலகம் அழியாத இறுதிக் காலத்திலும் ஒரு குறையும் இல்லை. அவனை மறவாமல் இருக்கும் அருளையும், இம்மைக்கு மட்டும் இல்லாமல் மறுமைக்கும் இனி மற்றொரு துணையை நாடமாட்டேன் என்று சுந்தரர் கழுமலம் எனும் சீகாழியின் பெருமையைக் கூறியுள்ளதை,

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன் அருள் தந்த எம் தலைவனை……..
……………………………………………………
……………………… கடல்கொளமிதந்த
கழுமல வளநகர்க் கண்டு கொண்டேன்
(Srimath Thirunavukarasu Thambiran Swamigal,1994)[1]

"மற்றொரு துணை இனி மறுமைக்கும் காணேன்
……………………………………………………
சுற்றிய சுற்றமும் துணை என்று கருதேன்
(Srimath Thirunavukarasu Thambiran Swamigal,1994)[1]

என்ற தேவாரப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

சேக்கிழார், சுந்தரர் இறைவன்மீது கொண்ட பேரன்பினால் வணங்கி நின்று, உலகம் அழியும் காலத்தில் கடலின் அலைகளில் மிதந்து வந்த தோணிபுரத்து இறைவனைக் கயிலையில் இருந்த திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்தேன் என்பதைப் பெரியபுராணத்தில்,

மண்டிய பேரன்பினால் வன்றொண்டர் நின்றிறைஞ்சித்
தெண்டிரை வேலையில் மிதந்த திருத்தோனிபுரத்தாரைக்
கண்டு கொண்டேன் கயிலையினில் வீற்றிருந்தபடி என்று
……………………………திருப்பதிகம் பாடினார் (Manikkanar, 1998)[2].

இப்பதிகம் சுட்டுகின்றது. மேலும் சீகாழிப் பெருமையைப் பற்றி,

"இம்மை யாசையு மறுமையிலாசையு மிகந்து
செம்மையாகிய கருத்தராய்ப் பரகதி தேர்வார் "
"மறுமைக்கு வித்துமயல் இன்றிச் செய்து
சிறுமைப் படாதே நீர்…………………… "

என்ற நாலடியார் பாடல்வரிகளும் எடுத்து இயம்புகின்றதைக் காணமுடிகிறது. இதன் மூலம் இறைவனிடத்தில் உண்மையுடன் பற்றுதலாய் இருந்தால் எங்கும் எந்த நிலையிலும் இறைவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற உலக நியதியைக் கூறுவதாக இப்பாடல்கள் மூலம் பெறப்படுகின்ற உண்மையாகும். இதனைப் பின்பற்றி நாமும் வாழ்வில் நன்மையை அடைய வேண்டும் என்பதே தேவாரமும் பெரியபுராணமும் மொழியும் உபதேசமாகும் (Manikkanar, 1990)[2].

**சுந்தரரைச் சிவபெருமான் தடுத்தாட் கொள்ளுதல்**

சுந்தரருக்குச் சிவபெருமான் பொன்னையும், போகத்தையும் கொடுத்து, வன்தொண்டன் என்ற பதவியையும் தந்து பிறகு ஓர் ஓலையைக் காட்டி என்னை அடிமை கொண்டவருமான இறைவன் இருக்கும் இடமாய் திகழ்வது திருநாவலூர் என்பதை,

வன்மைகள் பேசிட வன்தொண்டன்
என்பதோர் வாழ்வு தந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந்து
என்னைப் போகம் புணர்ந்த
…………………………………………
நம் திருநாவலூரே"

(Srimath Thirunavukarasu Thambiran Swamigal, 1994)[1]

என்ற தேவாரப் பாடல் மூலம் அறியமுடிகின்றது. இதனையே சேக்கிழார் பெரியபுராணத்தில் மறையவராகி வந்த இறைவன் சுந்தரரைத் தடுத்தாட் கொண்டதன் பின் திருநாவலூருக்குச் சென்று பணிந்து திருப்பதிகம் பாடினார் என்று சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட நிகழ்வை,

"…………அருட்டுறையமர்ந்த வேதியராட் கொண்டதற்பின்
பூவலருந் தடம் பொய்கைத் திருநாவலூர் புகுந்து

தேவர்பிரான் தன்னைப் பணிந்து திருப்பதிகம் பாடினார் ”

என்ற பாடல் மூலம் தனது பெரியபுராணததில் சுந்தரமூர்த்தி நாயனார் பற்றிப் பதிவு செய்துள்ளதும் இங்கு ஒத்த கருத்தையே சுட்டுவதாக உள்ளது (Kannan, 2014)[3]. மேலும் தடுத்தாட்கொண்டதற்கு வலுசேர்க்கும் விதமாக,

கெழுதும் தமிழ்ப்பழ ஆவணங்காட்டி எனக்குன்குடி
முழுவதும் அடிமை வந்தாட் செயெனப் பெற்றவன் முரல்தே
.............................. பிரானம்பியாருரனே”

என்பதை நம்பியாண்டார் நம்பி எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதி பாடல்வரிகள் புலப்படுத்துகின்றன (Ramalinga Swamigal,1982)[4].

**சுந்தரரும் வீடுபேறும்**

சுந்தரர் சிவபெருமானை நோக்கி திருமுறை பாடும்பொழுது நான் உனக்கு, முன்பே அடிமையாகிவிட்டேன் ஆனால் இப்பொழுது அடிமை இல்லை என வழக்கினை உரைத்தேன் (Kirubanantha Variyar,2004)[5]. அதனால் என்னை வெறுத்து ஒதுக்காமல், இனி நான் இறக்கவும், மீளப்பிறக்கவும், மூப்படைந்து வருந்தலும் இல்லாமல் என்னை ஏற்றுக் கொள்வாய் என,

முடியேன் இனிப் பிறவேன் பெறின்
மூவேன் பெற்றம் ஊர்தீ
கொடியேன் பல பொய்யே உரைப்

(Srimath Thirunavukarasu Thambiran Swamigal, 1994)[1].

இப்பாடலில் கூறியுள்ளார். இதனையே பெரியபுராண ஆசிரியரும் இந்நிலவுலகம் முதலாக எவ்வுலகத்தில் உள்ளாரும் உயரிய பேறான வீடுபேற்றை அடையும்படி,

கொத்தார் மலர்க் குழலாளொரு கூறாய் அடியவர்பால்
மெய்த்தானும் இனியானை அவ்வியன் நாவலர் பெருமான்
பித்தா பிறைசூடி எனப்பெரிதாந்திருப்பதிகம்
இத்தாரணி முதலாம் உலகெல்லாம் உய்ய எடுத்தார் (Manikkanar, 1998)[2]

என்னும் பாடலில் உமையம்மையை ஒரு பாகத்தில் வைத்ததனால் சிவபெருமான் அடியாரிடம் தாயினும் சிறந்த அன்பு உடையவராக விளங்குகிறார். அச்சிவபெருமானின் ஆணையின் படியே சுந்தரர் “பித்தா பிறைசூடி” என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாட தொடங்கினார். அவ்வகையில் சுந்தரர், வழியில் நின்றே வீடுபேற்றை அடைய வேண்டி சேக்கிழார் கூறியிருப்பதும் ஒற்றுமையுடன் உள்ளதைக் காணமுடிகின்றது (Rajarajan,2014)[6]. இதனையே, என்பதைச் சிற்றிலக்கியங்கள் ஒரு பார்வை என்ற நூலின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

**முடிவுரை**

சுந்தரர் திருமணக் கோலத்தில் திருவெண்ணெய் நல்லூரில் சிவபெருமான் ஓலையைக் காட்டி தடுத்தாட் கொண்ட செய்தி சுந்தரரால் தேவாரத்திலும், சேக்கிழார் பெருமானால் பெரியபுராணத்திலும், இடம் பெற்று இருப்பதைக் காணமுடிகிறது. வீடுபேறு அடைவதற்கான வழிகளையும் சேக்கிழார் கூறியுள்ளதை அறியமுடிகிறது. சுந்தரர் தேவாரத்தில் மகாபாரதம், இராமாயணம் போன்ற புராணச் செய்திகள் பதிவுச் செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

இறைவன் மீது பற்றுதலாய் இருந்தால் இறைவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற உலக நியதியைக் கூறுவதாகவும் இதனைப் பின்பற்றினால் நாமும் வாழ்வில் நன்மை அடையலாம் என்பதையும் உணரமுடிகிறது.

**References:**


1. Srimath Thirunavukarasu Thambiran Swamigal. (1994). Sundarar Thevaram Seventh Thirumurai Atheenam, Mayiladuthurai. Mailam Publication.
2. Manikkanar. (1990) Periyapuranam Source and text *[பெரியபுராணம் மூலம் உரையும்]* (First Part) Chennai. Varthanaman Publication.
3. Kannan (2014). Naladiyar, [*நாலடியார்*]. Madurai Aruna Publication, Therkaavani Moolaveedhi.
4. Ramalinga Swamigal. (1982). Nalvarnanmanimalai, Mailam, Bommayapalayam.
5. Kirubanantha Variyar. (2004). Kandaralangaram [*கந்தரலங்காரம்*], Chennai Vanathi Publication.
6. Rajarajan, R. K. (2014). Pancanrtyasabhas: Dancing Halls Five. Religions of South Asia, 8(2), 197–216. https://doi.org/10.1558/rosa.v8i2.197.